## வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
## காயல்பட்டணம்
## ஆளுமை மேம்பாட்டு குழு மற்றும் நுகர்வோர் குழு கூட்டம் 31.03.2022

காயல்பட்டணம், வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில்,ஆளுமை மேம்பாட்டு குழு (Personality Development Cell) மற்றும் நுகர்வோர் குழு (Consumer Club) சார்பாக 31.03.2022 அன்று மதியம் 2.00 மணியளவில் "One Step Further" என்ற தலைப்பில் மூன்றாம் ஆண்டு மாணவியருக்கான நிகழ்ச்சி நடைபெற்றது. மூன்றாமாண்டு கணிதத்துறை மாணவி Z.A. சைனப் கிராத் ஓத, தமிழ்த்தாய் வாழ்த்துடன் இனிதே ஆரம்பமானது.

வணிகத்துறை பேராசிரியை திருமதி P. நசீரா பானு M.Com., M.Phil., வரவேற்புரை வழங்கினார். அதனைத் தொடர்ந்து இயற்பியல் துறை பேராசிரியை செல்வி A. ஜெய் நிர்மலா M.Sc., M.Phil., B.Ed., SET சிறப்பு விருந்தினரை மாணவியருக்கு அறிமுகம் செய்து வைத்தார். கல்லூரி முதல்வர் பொறுப்பு முனைவர் R. அருணாஜோதி M.A., M.Phil., Ph.D வாழ்த்துரையை வழங்கினார்.

சிறப்பு விருந்தினர் முனைவர் B. பென்னிசன் திலகர் கிறிஸ்ததாஸ் M.A., M.Ed., Ph.D அவர்கள் "One Step Further" என்ற தனது சொற்பொழிவை, மாணவர்கள் அறிவோடு ஆற்றலையும் வளர்த்துக் கொள்ளும் விதத்தில் வழங்கினார். பார்வையாளர்களாக மாணவியர் விருந்தினரோடு இணைந்து பேச்சுத் தொடர்புக்கான ஆற்றலை எவ்வாறு வளர்த்துக் கொள்வது என்று ஆர்வத்தோடு கற்றுக்கொண்டனர். இந்நிகழ்ச்சியில் ஏறத்தாள 150மாணவியர் பங்கேற்றனர். கணிதத்துறை மாணவி Z.A. சைனப் துஆ ஓத நாட்டுப்பண்ணுடன் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.